DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 87/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | சம்பத் (காவல் துணைகண்காணிப்பாளர்) (PW.16) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of July 2026

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை –**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டத்தில் மாவட்ட குற்றப்பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.05.2016ம் தேதியன்று அருப்புக்கோட்டை நகர காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அருப்புக்கோட்டை காவல் நிலைய குற்ற எண்.140/2016, 258/2016, 259/2016, 381/2016 இதச பிரிவு 392–ன் கீழான வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, இவ்வழக்கின் எதிரிகளை தேடி எனது போலீசார் பார்ட்டிகள் எல்லாம் ரோந்து வந்தபோது, அதிகாலை 5.00 மணியளவில் அருப்புக்கோட்டை ரயில்வே நிலையம் அருகே சந்தேகத்திற்கு இடமான வகையில் நின்று கொண்டிருந்த 3 நபர்களை விசாரித்தபோது 1) பதி (எ) வெங்கடாசலபதி 2) மணிகண்டன் 3) சந்திரசேகர் என்றும், மதுரையை சேர்ந்தவர்கள் என்றும் கூறினார்கள். வழக்கு தொடர்பாக விசாரணை

செய்தபோது, அவர்கள் திருச்சுழி, மல்லாங்கிணறு, அருப்புக்கோட்டை தாலுகா காவல்நிலையங்களுக்கு உட்பட்ட பல இடங்களில் பெண்கள் நடந்து போகும்போதும், இருசக்கர வாகனங்களில் செல்லும்போதும் அவர்களிடமிருந்த நகைகளை பறித்தது சம்மந்தமாக எங்களிடம் கூறியதால், அவ்வழியாக வந்த சாட்சிகள் 1) செல்வம் 2) மாரிமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் பதி (எ) வெங்கடாசலபதி என்பவர் எவ்வித அச்சமுமின்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதிகாலை 5.00 மணிக்கு பதிவு செய்தேன். **(பதி (எ) வெங்கடாசலபதி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. 2வது எதிரி மணிகண்டன் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் காலை 6.00 மணிக்கு பதிவு செய்தேன். **(மணிகண்டன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 29.05.2016ம் தேதியன்று மதியம் 12.00 மணிக்கு மதுரை தெற்குவாசலில் உள்ள சோலியசெட்டியர் தெருவுக்கு எதிரிகளுடன் சென்று, எதிரி மணிகண்டன் என்பவர் வீட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த சுமார் 8 பவுன் எடையுள்ள தங்க செயின் ஒன்றை சாட்சிகள் அழகர், குருசாமி ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். **(அந்த அத்தாட்சி அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் மேலும் பல வழக்குகளில் உள்ள நகைகளை மணிகண்டன் எடுத்து ஆஜர் செய்தார். பிறகு வழக்கின் நகைகள் மற்றும் எதிரிகளுடன் காவல் நிலையம் வந்து, எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். திருச்சுழி காவல் நிலைய குற்ற எண்.280/2015 வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்தை திருச்சுழி காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

**எ.த.கு.வி**

1. நான் எனது முதல் விசாரணையில் திருச்சுழி காவல் நிலையம் சம்மந்தப்பட்ட குற்ற எண் தொடர்பாக ரோந்து சென்றதாக

சொல்லவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை எங்கு வைத்து எப்போது கையொப்பம் வாங்கினேன் என்றால், நான் எதிரிகளை விசாரித்துக்கொண்டிருந்தபோது அந்த வழியாக வந்த நபர்களை சாட்சிகளாக கேட்டு விசாரித்து பின்னர் கையொப்பம் வாங்கினேன். நான் சாட்சியாக கையொப்பம் வாங்கிய நபர்கள் அருப்புக்கோட்டை தாலுகாவை சுற்றியுள்ள நபர்கள் என்றால் சரிதான். அத்தாட்சி எழுதப்பட்டதா? அல்லது டைப் செய்யப்பட்டதா? என்றால் மடிக்கணினி மூலம் டைப் செய்யப்பட்டது. அத்தாட்சியை யார் டைப் செய்தார்கள் என்றால், என்னுடன் இருந்த காவலர் நான் சொல்ல சொல்ல டைப் செய்தார். எங்கு வைத்து டைப் செய்யப்பட்டது என்றால், மேற்படி எதிரி பொருட்களை ஆஜர் செய்த இடத்தில் வைத்து டைப் செய்யப்பட்டது. காவல் நிலையத்திலிருந்து ரோந்து செல்லும்போது தட்டச்சு செய்யக்கூடிய மடிக்கணிணியை எடுத்து சென்றோமா என்றால், இல்லை.

2. ஒப்புதல் வாக்குமூலம் எதிரிகள் கொடுத்தவுடன் நேரடியாக மதுரைக்கு சென்றோமா? அல்லது காவல் நிலையத்திற்கு சென்றோமா என்றால், காவல் நிலையத்திற்கு வரவில்லை, நேரடியாக அத்தாட்சி தயார் செய்த இடத்திற்கு சென்றுவிட்டோம். அத்தாட்சி சாட்சிகளான அழகர் மற்றும் குருசாமி ஆகியோர்களை நான் அழைத்து சென்றேனா என்றால், இல்லை அவர்களை அங்கு வரசொன்னோம். சாட்சிகள் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் நாங்கள் பொருட்களை கைப்பற்றும்போது வந்தார்கள், அவர்கள் முன்னிலையில்தான் பொருட்களை கைப்பற்றினோம். எத்தனை மணிக்கு வந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால், பொருட்களை கைப்பற்றுவதற்கு முன்பாகவே வந்துவிட்டார்கள், எத்தனை மணி என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது.

3. பொதுவாக அருப்புக்கோட்டையிலிருந்து மதுரைக்கு பேருந்தில் செல்வதற்கு 1 முதல் 2 மணி நேரம் ஆகும் என்றால், 1 மணி நேரத்தில் சென்றுவிடலாம். நாங்கள் சம்பவ இடம் சென்றபின்னர் சாட்சிகளை வரசொன்னோமா என்றால், இல்லை, அந்த இடத்தை சொல்லிவிட்டோம். நாங்கள் செல்லும்போதே சாட்சிகள் அங்கு வந்துவிட்டார்கள். பொருட்களை கைப்பற்றியவுடன் சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கி விட்டோமா என்றால் மடிக்கணிணியில் இருந்து பென்டிரைவ் மூலம்

அருகில் உள்ள கடையில் இருந்து பிரிண்ட் எடுத்து கையொப்பம் வாங்கினோம். நான் சொன்ன நாள் நேரத்தில் இவ்வழக்கில் 4, 5 எதிரிகளை நான் கைது செய்யவில்லை என்றாலும், அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், அத்தாட்சியில் பொருட்களை கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. சான்று பொருட்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.